முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 48 - தமிழ் இலக்கிய நயம்

## புள்ளி வழங்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| பகுதி I | 1 ஆம் வினா | 04x05 = 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா | 04x05 = 20 புள்ளிகள் |
| பகுதி II | 1ஆம் வினா | 06x05 = 30 புள்ளிகள் |

( எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் )

| | |
|---|---|
| 2ஆம் வினா 15 புள்ளிகள் | 15 x 02 = 30 புள்ளிகள் |
| 3ஆம் வினா 15 புள்ளிகள் | |
| 4ஆம் வினா 15 புள்ளிகள் | |
| 5ஆம் வினா 15 புள்ளிகள் | |

**மொத்தம் 100 புள்ளிகள்**

# 48 - தமிழ் இலக்கிய நயம்

## பகுதி - I

1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "தாமரை வதனம் சாய்த்து,
தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தானாம்
என, மைந்தன் நிற்ப"

(அ) இங்கு மைந்தன் எனப்படுபவன் யார்?

**இலக்குவன்**

(ஆ) மைந்தனின் எத்தகு நிலை இங்கு விவரிக்கப்படுகிறது? அது எவ்வாறு விவரிக்கப்படுகிறது?

**பெண்களால் சூழப்பட்டதால் வெட்கத்தோடு நிற்கும் நிலை**
**எவ்வாறு :- மாமியர் குழுவில் அகப்பட்ட புது மருமகன் போல** **(04 புள்ளிகள்)**

(ii) "சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைத்தன"

(அ) தளவம், தகைத்தன ஆகிய சொற்களின் பொருளைத் தருக.

**தளவம் :- செம்முல்லை**
**தகைத்தன :- அரும்பின**

(ஆ) தளவம் தகைத்த அழகை விவரிப்பதற்குக் கையாளப்பட்டுள்ள உவமையை இனங்கண்டு விளக்குக.

- **சிரல் வாய்**
- **உவமானம்:- சிச்சிலி குருவியின் வாய்**
  **உவமேயம்:- செம்முல்லை அரும்பு**
  **பொதுத்தன்மை :- தோற்றம்** **(04 புள்ளிகள்)**

(iii) "ஆட்சியியல் மறு பாடம் - உடல்
அங்கே எனினும் மனம் எங்கோ ஓடும்
ஆட்சி செய்யுமுனைச் சாடும் - நான்
ஆழிச் சுழியில் மிதந்திடும் ஓடம்."

(அ) கவிஞருடைய மனம் யாரைச் சாடுகிறது? ஏன் சாடுகிறது?

- **காதலியை**
- **பாடத்தில் மனம் பதிக்க முடியாதபடி அவளுடைய கண்கள் அவனைக் கவர்ந்து குழப்புவதால்**

(ஆ) தன்னுடைய நிலையை உணர்த்துவதற்குக் கவிஞர் கையாண்டுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.

- **உருவக அணி / உவமைஅணி**
- **காதலியின் கண்பார்வையில் இழுப்புண்ட தன்னை ஆழிச்சுழியில் அகப்பட்ட ஓடமாக உருவகிக்கிறார்./ ஓடத்திற்கு உவமிக்கிறார்** **(04 புள்ளிகள்)**

(iv) "முழு நிலவின் பால் குடித்த கடற்கரையின் பூமணலில் காமனும் ரதியும்போல் ஆடிக் களித்தனரென்று பார்த்தவரெல்லாம் சொன்னார்கள்"

(அ) காமனும் ரதியும் போல் ஆடிக் களித்தவர்கள் யாவர்?

**கோவலன், மாதவி**

(ஆ) நிலவின் பிரகாசமும் கடற்கரை மணலின் மென்மையும் எவ்வெவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன?

**நிலவின் பிரகாசம் :- முழு நிலவின் பால் குடித்த கடற்கரை**
**மணலின் மென்மை:- பூவைப் போன்ற மணல் / பூ மணல்** **(04 புள்ளிகள்)**

(v) "உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை"

(அ) இக் கூற்றில் வலியுறுத்தப்படும் உண்மை யாது?

**உரிமையில்லாமல் கடமையில்லை;**
**கடமையில்லாமல் உரிமையில்லை.**

(ஆ) அதை வலியுறுத்துவதற்குக் கையாளப்பட்டுள்ள உவமை எவ்வகையில் பொருத்தமுடையதாகிறது?

**ஒரு நாணயம் இரண்டு பக்கம் இல்லாமல் இருக்க முடியாது. அது போல உரிமை, கடமை இரண்டும் இல்லாது மனிதனுக்கு வாழ்க்கை இல்லை.** **(04 புள்ளிகள்)**

**(05X04 = 20 புள்ளிகள்)**

**2.** கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இரவு நீண்டு மௌனம் வளர்த்தது. மேசையில் பாணும் பருப்புக் கறியும் தீண்டுவாரற்றுக் கிடந்தது. இமைகள் இறுகிக் கனத்து மூட மறுத்தன. பசியிருந்தும் உணவு வெறுத்தது. உள்ளத்தில் உக்கிரமான புயல்! நெருஞ்சி முள்ளாய் நினைவுகள்!!

"ஏண்ட பேரனுக்கு.... நெருப்பு மாதிரி காயுது! டொக்டர் கிட்ட போவ எண்டாலும் எனக்கிட்ட ஐஞ்சி சதமில்ல. யா அல்லாஹ் நான் என்னத்த செய்ய!"

கீறல் விழுந்த இசைத்தட்டின் ஒலியாய் கிழவியின் புலம்பல் செவிப்புலனில் நிறைகிறது. விடியும்வரை, உடலும் உள்ளமும் சுமையேறிக் கனத்தன. விடியல் கருக்கலின் கண் அசைப்பில் - காகங்கள் கரைந்தன. பசிக்களைப்பும் சோர்வும் அவஸ்தை தந்தன. ஒரு தீர்க்கமான முடிவுடன் மைமூன் ஆச்சியின் அமானிதத்தை ஒப்படைக்கும் உந்துதலில் வெளியே செல்லத் தயாரானேன்.

முதுகுப்புறத்தில் நிழலாய் ஒரு அசைவு!

"நில்லுங்க! இந்த கோப்பிய, குடிச்சிட்டுப் போங்க, ராவும், பசியில இருந்திட்டு....!" வார்த்தைகளின் கனிவு குழைந்தது. நான்கு நாள்களுக்கு முன் தொலைந்துபோன ஈரம் பாத்துமாவின் முகத்தில் முழு நிலவாய் ஒளிர்ந்தது. சிறகொடிந்த பறவை, பாறை இடுக்குகளில் உறைந்து உயிரைப் பத்திரப்படுத்துவதைப் போல், கிழவியின் கடிதத்தையும் தீர்க்கமான நெஞ்சையும் கெட்டியாக இறுக்கிக் கொண்டேன். "கலியாண வூட்டுக்குப் போவக் கிடைக்கல! என்ன செய்ய, பொறகு ஒரு நாளைக்குப் போவோம்!" பாத்தும்மா பரிவோடு வெள்ளக்கொடி காட்டினாள். சுமைகளின் அழுத்தம் குறைந்து மனவலி லேசாகிறது.

கிழவியின் தரிசனம் வேண்டி சைக்கிள் விரைகிறது.

(i) மனப்போராட்டம் காரணமாக கதை சொல்லி (தபாற்காரர்) அனுபவித்த துன்பம், நயமான முறையில் விவரிக்கப்படுமாற்றை விளக்குக.

- இரவு நீண்டு மௌனம் வளர்ந்தமை (நீண்ட நேரமாக எவரோடும் பேசாத தனிமை நிலை)
- மேசையில் பாணும் பருப்புக்கறியும் தீண்டுவாரற்றுக் கிடந்தமை.
- பசியிருந்தும் உணவை வெறுத்தமை.
- இமைகள் இறுகிக் கனத்து மூட மறுத்தமை (நித்திரையின்மை)
- உள்ளத்தில் உக்கிரமான போராட்டம்.(மனப் போராட்டம்)
- நினைவுகள் நெருஞ்சி முள்ளாய்த் தைத்தமை (குற்ற உணர்வு) **(04 புள்ளிகள்)**

(ii) கதைசொல்லிக்கு கிழவியின் புலம்பல் ஏற்படுத்திய துன்பம், எவ்வாறு நயம்பட உணர்த்தப்படுகிறது?

- கீறல் விழுந்த இசைத்தட்டின் ஒலியாய் கிழவியின் புலம்பல் செவிப்புலன்களில் நிறைகிறது.
- கிழவியின் புலம்பல் அவனது நெஞ்சத்தைத் தொடர்ச்சியாகத் தாக்கியமை.
- விடியும் வரை உடலும் உள்ளமும் சுமையேறி கனத்தமை ( உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்புறல்)

**(04 புள்ளிகள்)**

(iii) கதைசொல்லி, தன் மனைவி பாத்துமாவின் மனமாற்றத்தை எடுத்துரைக்கும் பாங்கில் காணப்பெறும் நயங்களை விளக்குக.

- வார்த்தைகளில் கனிவு குழைந்தமை.
- நான்கு நாட்களுக்கு முன் தொலைந்து போன ஈரம் (அன்பு) பாத்துமாவின் முகத்தில் முழு நிலவாய் ஒளிர்ந்தமை (கனிவு குழைதல், ஈரம் தொலைந்து போதல்,முழு நிலவாய் ஒளிவீசுதல் முதலான உருவகப்பாங்கான சொல்லாட்சிகள்)

**(06 புள்ளிகள்)**

(iv) கிழவியின் கடிதத்தையும் நீதிக்குச் சார்பான வகையில் தான் எடுத்த தீர்மானத்தையும் உறுதியாகக் காப்பாற்றிவிட வேண்டும் என்பதில் கதைசொல்லி காட்டும் அக்கறை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

- சிறகொடிந்த பறவை, பாறை இடுக்குகளில் உறைந்து உயிரைப் பத்திரப்படுத்துவது போல கிழவியின் கடிதத்தையும் தீர்க்கமான (உறுதியான) நெஞ்சையும் கெட்டியாக இறுக்கிக் கொண்டேன் என்பதனூடாக.

**(06 புள்ளிகள்)**

**(04+04+ 06+06 = 20 புள்ளிகள்)**

அல்லது

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! - தொழிற்
சாலையிலே சங்கு ஊதுமுன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே - நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்!

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு - என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

(i) மலையகப் பெண் தொழிலாளர்கள் தங்கள் தொழிலிலே கொண்டுள்ள அக்கறை எவ்வெவ்வாறு வெளிப்படுகின்றது?

- **குளிர் காற்றைக் கிழித்துக் கொண்டு தொழிலுக்கு ஓடல்**
- **சங்கு ஊத முன் தளிர் கிள்ளல்**
- **கைகள் விறைத்தாலும் தளிர் கிள்ளல்**
- **உடல் குளிரால் நடுங்கினாலும் தளிர் கிள்ளல்**
- **கொழுந்தெடுப்பதில் கவனமெடுத்தல். (கெண்டை விழிகள் பளபளக்கும்)**
- **பக்கத்தில் உள்ள நிரைச்செடிகளில் சிக்கினாலும் பக்குவமாக அவற்றை விலக்கிச் சென்று த... பணியில் ஈடுபடல்.**
- **மன வேதனைகள் இருந்த போதிலும் நேர்த்தியாகக் கொழுந்து பறித்தல்.**

**(04 புள்ளிகள்)**

(ii) ஒடுக்குமுறைகளுக்கு எதிரான அவர்களின் போராட்ட மனப்பாங்கு எவ்வெவ்வாறு வெளிப்படுகின்றது?

- **பெண்களை அடிமைச்சிறையிலே வைத்த எத்தர்கள் கொட்டம் அடக்கிடுவோம்**
- **குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு போரிட முன்வருவோம்**
- **பெண்ணுக்குக் கல்வி பெரும் தீது, உரிமை பேசிடலோ பெரும் தவறு என்ற எண்ணம் படைத்தவ... மண்ணில் புதைந்திடச் செய்வோம்**

**இக் கூற்றுக்கள் மூலம்**

**(04 புள்ளிகள்)**

ii) "கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' ஓசை"

"பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவமாக விலகிச் செல்வோம்"

தேயிலைத் தோட்டத்தில் தொழில் செய்யும்போது சாதாரணமாக ஏற்படும் மேற்படி அனுபவங்கள், எதை எதை விவரிப்பதற்கு இக்கவிதையில் எடுத்துரைக்கப்படுகின்றன? அவ்வாறு எடுத்துரைப்பதிற் காணப்படும் பொருத்தப்பாடு யாது?

- **கிறுக்கிறுக் ஓசையில் மன வேதனை ஒலி வெளிப்படுகிறது.**
- **அடிமைத் தளையினைத் தூக்கியெறிய துணிவு கொள்ளல்.**

**தொழில் செய்யும் போது ஏற்படும் சாதாரண அனுபவங்கள், தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டத்தோடு பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தி நோக்கப்படுதல். சாதாரண அனுபவங்களும் அவர்களுக்கு வாழ்க்கைப் போராட்டத்தையே நினைவூட்டுவனவாக அமைதல்.**

**(06 புள்ளிகள்)**

(iv) இக்கவிதையில் இடம்பெற்றுள்ள உவமை, உருவக அணிகளை இனங்கண்டு விளக்குக.

**உவமை அணி**

- **தோட்டப் பெண் தொழிலாளர்களின் மனதில் அவர்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிரான உணர்ச்சிகள் திரண்டெழுவதற்கு தேயிலைச் செடியை வெட்ட வெட்ட புதிய அரும்புகள் பலவாக முளைத்தெழுவது உவமிக்கப்பட்டுள்ளது.**
- **பெண்தொழிலாளர்களின் மன உறுதிக்கு குன்று உவமிக்கப்பட்டுள்ளது.**
- **தேயிலைத் தளிர் தங்கத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.**
- **தேயிலைத் தோட்டப் பெண்களின் விரல்களுக்கு வெண்டைக்காய் உவமிக்கப்பட்டுள்ளது.**
- **கெண்டை மீன் தேயிலைத் தோட்டப் பெண்களின் கண்களுக்கு உவமிக்கப்பட்டுள்ளது.**

**உருவகம்**

- **நெஞ்சம் மேடையாக உருவகிக்கப்பட்டுள்ளது.**
- **ஒடுக்குமுறை பேரிருளாக உருவகிக்கப்பட்டுள்ளது.**
- **அடிமை நிலை சிறையாக உருவகிக்கப்பட்டுள்ளது.**
- **அடிமைநிலை தளையாக (விலங்காக) உருவகிக்கப்பட்டுள்ளது.**

**(06 புள்ளிகள்)**

**(04+04+ 06+06 = 20 புள்ளிகள்)**

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**48 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023 (2024)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
**தமிழ் இலக்கிய நயம் I, II**
Appreciation of Tamil Literary Texts I, II

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் II

※ பகுதி **II** இல் **1 ஆம் வினாவுக்கும்**, ஏனைய **2, 3, 4, 5** ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக, மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
※ தரப்படும் விடைப்புத்தகத்தில் விடை எழுதி, வேறாகக் கையளிக்கவும்.
※ பகுதி **II** இற்கு **60** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் **200** சொற்களில் எழுதுக.

தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்! சுவைகள் உண்டேன்!
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சம்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்;
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்.
அமுதம் போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்
சுமைசுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

நாலைந்து வீதிகளுக்கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்.
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
        மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
        அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
        நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்ற தொண்டிழைப்பீர்! சமுதாயச்சீர்
        மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!

அ) புத்தக வாசிப்பால் கிடைத்த இனிய அனுபவம்

- **பூமியின் இயற்கை அழகு. இசையின்பம், நறுமணம், இனிய சுவைகள் என (புலனின்பம்) அனைத்தையும் அனுபவித்தல்.**
- **மனிதர்களில் மிக உயர்ந்தவர்களாகக் கருதப்படும் கவிஞர்களுடைய அறிவொளியில் நெஞ்சம் கலத்தல்.**
- **புத்துணர்வு பிறத்தல்.**

**(06 புள்ளிகள்)**

(ஆ) புத்தகசாலைகளால் சமுதாயத்துக்குக் கிடைக்கும் நன்மைகள்

- **புத்தகத்தோடு சையோகம் புரிதல்**
- **மனிதர் யாவரும் அன்பு நெறி காணல்**
- **விரிந்த மனப்பாங்கினைப் பெறல்.**
- **சுயநல மனப்பான்மை நீங்குதல்.**
- **சகோதரத்துவ மனப்பான்மை வளர்தல்.**
- **சமுதாய மறுமலர்ச்சி ஏற்படல்.**
- **புனிதத் தன்மை அடைதல்**
- **புதுவாழ்வு பெறுதல்**

**(06 புள்ளிகள்)**

(இ) புத்தகசாலைகளிற் பேணப்பட வேண்டிய நூல்களின் வகைகள்

- **தமிழிலில்லாத பிற மொழிகளிலுள்ள நல்ல நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு**
- **இனிய தமிழ்க்கவிதை நூல்கள்.**
- **அழகிய உரைநடை நூல்கள்.**

**(06 புள்ளிகள்)**

(ஈ) புத்தகசாலைகள் அமைய வேண்டிய முறைமையும் அவை சேவையாற்ற வேண்டிய முறைமையும்

- **நூல்களைப் பெருந்தொகையாகச் சேகரித்து துறை அடிப்படையில் வகைப்படுத்தி ஒழுங்காக அடுக்கி வைத்தல்**
- **அனைத்துச் செய்தித்தாள்களும் இருத்தல்.**
- **நல்லதாய் வசதியாய் இருத்தல்.**
- **நாலைந்து வீதிகளுக்கொன்றாக புத்தகசாலைகள் அமைதல்.**
- **நொடிக்கொரு தடவை ஆசிரியர் உதவுதல் வேண்டும்.**
- **புதிதாக வெளி வந்த நூல்களும் கிடைக்கக் கூடியதாக இருத்தல்.**
- **மூலை முடுக்கில் சிறிய நூலாயினும் புது நூலாய் இருந்தால் தலையில் சுமந்து வந்து தருதல்.**

- வாசிக்க வருபவர்களது வருகையை ஏற்று மரியாதை செய்து இருக்கை கொடுத்தல்.
- வருபவர்கள் கேட்கும் நூல்களைத் தருவதோடு புதிய நூல்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுக்குத் தெரிவித்தல்.
- எண்ணம், சொல், உடல் ஆகியவற்றால் மாசற்ற தொண்டாக இதனை மேற்கொள்ளல்.
- வாசகர் தொகையை அதிகரிக்கும் வகையில் நடந்து கொள்ளல்.

**(06 புள்ளிகள்)**

(உ) கவிதையிற் பயின்றுள்ள அணிகளும் அவற்றிற் காணத்தகும் நயங்களும்

**உவமையணி**

- வானைப்போல் விரிந்த மனோபாவம்

உவமானம் :- வானம்
உவமேயம் :- மனப்பாங்கு
பொதுத்தன்மை :- எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளுதல் / சகித்துக் கொள்ளுதல் / பரந்த தன்மை

- சர்வகலாசாலை போன்ற சுவடிச்சாலை

உவமானம் :- சர்வகலாசாலை
உவமேயம் :- சுவடிச்சாலை
பொதுத்தன்மை :- பல்துறை அறிவைப் புகட்டுதல்.

- அமுதம் போன்ற செந்தமிழ்க் கவிதை நூல்கள்

உவமானம் :- அமுதம்
உவமேயம் :- செந்தமிழ்க் கவிதை
பொதுத்தன்மை :- இனிமை / உயிருக்கு உறுதி பயத்தல்

**உருவகம்**

- தனிமனித தத்துவமாகிய இருள்
  சுயநலம் இருளாக உருவகிக்கப்பட்டுள்ளது.

- கவிஞர் நெஞ்சின் மகாசோதி
  அறிவு பேரொளியாக உருவகிக்கப்பட்டுள்ளது

**(06 புள்ளிகள்)**

**(06+06+06+06+06 = 30 புள்ளிகள்)**

பெண்ணின் அழகு,

(i) நலம் புனைந்து உரைத்தல்

(ii) கிட்கிந்தைப் படலம்

ஆகியவற்றில் நயம்பட வருணிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(i) **தலைவியின் அழகு**

**கண்கள்**

- தலைவியின் கண்கள் மலர் போன்று இருப்பதால் பூக்களைக் காணும் வேளையில் அவற்றை அவளது கண் என்று நினைத்து ஏமாந்து விடாதே எனல்
- தலைவியின் கண்களுக்கு நாம் ஒப்பாகமாட்டோம் எனக் குவளைமலர் நாணித் தலை கவிழும் எனல்
- கண்ணை வேலாக உருவகித்தல்

**முகம்**

- நிலவையும் தலைவியின் முகத்தையும் வேறுபடுத்திக் காணமுடியாமல் வானத்து நட்சத்திரங்கள் மயங்கும் எனல்
(நிலவை ஒத்த முகம்)
- சந்திரனிடத்து மறு இருப்பது போல் தலைவியின் முகத்தில் எந்த மறுவும் இல்லை எனல்
(நிலவை விட மேம்பட்ட முகம்)
- நிலவே தலைவியின் முகம் போல் ஒளிவீசுவாயானால் நீயும் என் அன்புக்கு உரித்தாவாய் எனல்
(தலைவியின் முகத்துக்கு நிலவு ஈடாகாது)
- நிலவே மலர் போன்ற கண்களையுடைய இவளது முகத்தைப் போன்று நீயும் இருக்க விரும்பினால் பலரும் காணும்படி தோன்றாதே எனல்

**இடை**

- அனிச்சப் பூவை கால் களையாமல் சூடிக் கொண்டதால் தலைவியின் இடை ஒடிந்தது (மெல்லிடை)

**பாதம்**

- அனிச்சப் பூவும் அன்னத்தின் இறகும் பெண்ணின் அடிகளை நெருஞ்சி முள் போல் வருத்துகின்றன
(மென்மையான பாதம்)

**மென்மை**

- முறிமேனி (தளிர் போன்ற மேனி)

**பல்**

- ... முறுவல் (முத்துப் போன்ற பல்)

**தோள்**

- வேய்த் தோள் (மூங்கில் போன்ற தோள்)

**(07 புள்ளிகள்)**

(ii) **வனர மகளிரது அழகு**

- வெள்வளை - வெண்மையான வளையல்களை அணிந்திருத்தல்
- தாழ் குழல், வார் குழல் - நீண்ட கூந்தலை உடையவர்கள்
- மெல்லியல் - மென்மைத் தன்மை உடையவர்கள்
- முத்தம் முறுவல் - வெண்ணிறப் பற்களைக் கொண்டிருத்தல்(முத்துப்போன்ற பற்கள்)
- இலங்கு நுண்ணிடை - ஒளிர்கின்ற நுண்ணிய இடையைக் கொண்டவர்கள்
- ஏந்திள மென்முலை - உயர்ச்சியும், இளமையும் பொருந்திய மார்பகங்களைக் கொண்டிருத்தல்
- தோகை மகளிர் - மயில் போலும் சாயலை உடையவர்கள்
- பூமியில் அணங்கு அனார் - மண்ணுலகில் வந்து தோன்றிய தேவமகளிர் போன்றவர்கள் எனல்
- அணிந்திருக்கும் ஆபரணங்கள் விற்படை வாட்படை போல் ஒளி வீசுதல்
- மேகலையும், சிலம்புகளும் பேரிகைபோல் ஒலித்தல்
- புருவக் கொடி - நீண்ட புருவம்
- அல்குலாம் தடம்தேர் - தேரை ஒத்த அல்குல்
- வேற்கண் - வேலைப் போன்ற கண்
- விற்புருவம் - வில்லைப் போன்ற புருவம்

தாரை

- அழகிய தோள்களையும் நீண்ட கண்களையும் உடையவள்
- நறுமணம் கமழும் நீண்ட கூந்தலை உடையவள்
- இசையை விட இனிய சொல்லை உடையவள்
- பாக்கு மரம் போன்ற கழுத்தை உடையவள்

(08 புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)

(i) பிரமிளின் நாளைய புரட்சி

(ii) திருமாவளவனின் இருப்பு

ஆகிய கவிதைகளில் அக்கவிஞர்களின் விமர்சன நோக்கு வெளிப்படும் பாங்கினைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

(i)
- ஏழைகளின் பசி நிரந்தரமானது – இதுவே சமகால ஜதார்த்தம்
(வயற்றில் குடியிருந்து வாழ்ந்து பசிக்கிறது நிகழ்காலம்)
- ஏழைகளைச் சாட்டாகக் கொண்டு முதலாளிகள் கட்சி அரசியல் (வெற்றுக் கோசங்கள்) செய்கிறார்கள்
- அந்தக் கோசம் எதுவும் பசித்தவனுக்கு உதவவில்லை
– பசியில் அடைத்த காதிலும் விழுகிறது "நாளை புரட்சி சரித்திரம் நமது கட்சி"
- அந்த வெற்றுக் கோசங்கள் ஏழைகளின் உண்மை நிலையை மூடி மறைப்பன
(என் பசியைக்கூட ஜீரணிக்க முயற்சிக்கும் ஏப்பக் குரல்)
- "நாளை புரட்சி சரித்திரம் நமது கட்சி" என்று கோசம் இட்டாலும் ஏழைகள் எப்போதும் ஏழைகளாகவே இருக்கிறார்கள்.(ஏழைகளை வைத்து பிழைப்பு நடாத்துபவர் பிழைத்துக் கொண்டே இருப்பர்)
- வரலாறு இவ்வாறு எந்த மாற்றமும் இன்றி முன்பு இருந்தவாறே தொடர்கிறது.

**(07 புள்ளிகள்)**

(ii)
- மீனின் சுதந்திர வாழ்வு அதற்கே உரிய இயற்கையான நீர் நிலையிலேயே உண்டு
- கண்ணாடியிலான நீர்த்தொட்டி அழகியது ஆயினும் அது மீன் இயல்பாக நீந்தித் திரிவதற்கு உரியது அல்ல; மிகச் சிறியது.
- அது நீந்தும் நீரும் அதற்குரிய இயற்கை நீர் அல்ல; சுத்திகரிக்கப்பட்ட செயற்கைத் தன்மை வாய்ந்த நீர்.
- நீரில் இயற்கைத் தாவரங்கள் இல்லை – இருப்பவை எல்லாம் செயற்கையானவையே
- இயற்கை வெளிச்சம் இல்லை – செயற்கை வெளிச்சம் ஊட்டப்படுகிறது
- வழங்கப்படும் உணவும் இயல்பானது அல்ல; பதனிடப்பட்ட செயற்கை உணவு அதுவும் மீன் தன் விருப்பப்படி தேடி உண்ணும் உணவு அல்ல.
- நேரத்திற்கு நேரம் வழங்கப்படும் உணவு (நேரம் தவறா உபசரிப்பு) – மீன் விரும்பிய நேரத்தில் கிடைப்பதல்ல.
- நீர்த் தொட்டி பார்வைக்குச் சொகுசானதாகவேபடுகிறது. ஆனால் அதற்குள் வாழும் மீனைப் பொறுத்தவரையில் அது சிறை வாழ்க்கை – துயர வாழ்க்கை.
(மீன், மனிதனைக் குறிக்கும் குறியீடு என்ற வகையிலும் விபரிக்கப்படலாம்)

**(08 புள்ளிகள்)**

**(07 + 08 = 15 புள்ளிகள்)**

4. மென்மையே வாழும் என்பதை, கவிக்கோ அப்துல் ரஹ்மான்,

(i) மனித நடத்தைகள்

(ii) இயற்கை அம்சங்கள்

ஆகியவற்றின் மூலம் நிறுவும் வகையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

(i)

- வலிமையானவர்கள் போருக்கு அனுப்பப்படுகிறார்கள்; அங்கோ அவர்கள் அழிந்து விடுகிறார்கள் ஆனால் மென்மையானவர்கள் போருக்குப் போகாததால் தப்பி விடுகிறார்கள். (முதியவர்கள், பெண்கள்,குழந்தைகள்)
- வன்முறையே வாழ்க்கையாகக் கொண்ட ரவுடிகள் சீக்கிரம் செத்துப் போகிறார்கள்; மென்மையானவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள்.
- ஆங்கிலேயரின் வலிமையான படையை காந்தியடிகளாரின் அகிம்சை வென்றது.
- வலியவர்களான கொடியவர்கள், வழிப்பறிக் கொள்ளையர்கள் ஆகியோரையும் மென்மையான இசை கட்டுப்படுத்திவிடுகிறது.
- போர்க்களத்தில் மாவீரர்களையும் வென்றவன் பெண்ணின் பார்வைக்குத் தோற்று அவளது காலடியில் வீழ்ந்து விடுகிறான்.
- வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்திலேயே இடம் கிடைக்கிறது; மென்மையானவர்களுக்கோ அழியாத காவியங்களிலே இடம் கிடைக்கிறது.

**(07 புள்ளிகள்**

(ii)
- நாக்கு மென்மையானது; பல் வலிமையானது.
  நாக்கு காலத்தால் மூத்தது; பல் இளையது.
  எனினும் மனிதனுக்கு வயது முதிர முதிர பற்கள் விழுந்து விடுகின்றன நாக்கு அப்படியே இருக்கிறது
- நீர் மென்மையானது. ஆனால் வெள்ளமாகப் பெருகினால் வலிய கரைகளையும் அணைகளையு தகர்த்து ஊரையே அழித்து விடுகிறது.
- நெருப்பு வன்மையானது. ஆனால் அதனை மென்மையான நீர் அழித்து விடுகிறது. நெருப்பு அழியும்; நீர் அழியாது.
- காற்று மென்மையானது. ஆனால் அது புயலானால் பெரிய மரங்களையும் சாய்த்துவிடுகிறது.
- கடும் புயலில் வலிய மரங்களும் சாய்ந்து விழுகின்றன; மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது
- பூகம்பத்தில் வலிய வீடுகள் உடைந்து போகின்றன; மென்மையான சிலந்தி வலை தப்பித்து விடுகிறது.
- வன்மையான கல்லை மென்மையான வேர் பிளந்துவிடுகிறது.

- வெப்பம் வன்மையானது ஒளி மென்மையானது. ஆனால் வெப்பம் போகாத தூரத்துக்கு ஒளி போகிறது.
- வன்மையான பொருள் நுழைய முடியாத இடங்களில் மென்மையான நீர் நுழைந்து விடுகிறது.

(08புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)

எலியம் சிறுகதையில்,

(i) கதை நிகழ் களங்கள்

(ii) பிரதான பாத்திரம் எலிகள்மீது கொண்டுள்ள அதீத வெறுப்பு

ஆகியவற்றை விவரிக்கும் பாங்கில் ஆசிரியரின் நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)

(i) ● **குடிவந்த வீடும் அதன் சூழலும்**

- புகைப்படப்பிடிப்பு நிலையம் :
  - வீட்டிலிருந்தே ஒப்பனை செய்து கொண்டு போகலாம் எனல்
  - சீப்பு பற்றிய விபரிப்பு (ஒல்லாந்தர் காலத்தது)
- பேக்கரி :
  - பாணுக்கும் கேக்குக்கும் இடையில் வேறுபாடு இல்லை எனல்
- பாழ் வளவு :
  - கார் பற்றிய விபரிப்பு
    - அநாதைக்கார் எனல்
    - இறக்குமதி செய்யப்பட்ட முதல் நூறு கார்களுள் ஒன்று எனல்
    - வாங்கியவரின் வழித்தோன்றல் தீயிட்டுக் கொழுத்தியிருக்கலாம் எனல்

(07 புள்ளிகள்)

(ii)
- புத்தம் புது மணச்சவர்க்காரம் காணாமற் போனமை தொடர்பான விபரிப்பு (எலிஸாவிற்குக் கொண்டு போய்க் கொடுத்திருக்கலாம்)
- எலியிடமிருந்து தப்பித்துக் கொள்ள முயன்றபோது ஏற்பட்ட துன்பம் பற்றிய விபரிப்பு (கட்டிலில் ஏறிக்குதித்து காயம் ஏற்படுத்திக் கொண்டமை)
- எலிகளை மாபெரும் எதிரிகளாகப் பிரகடனம் செய்தமை.
- உலகிலும் பல கிரகங்களிலும் சாதனைகள் புரியும் நாட்டினரால் தயாரிக்கப்பட்ட எலிப்பொறியைத் தெரிந்தெடுத்தமை பற்றிய விபரிப்பு.
- எலிகள் பொறியில் அகப்பட்டு இறக்கப் போவது பற்றிய குதூகல உணர்வு (கருவாட்டிற்காக மூஞ்சியை நீட்டி மரண அடிவாங்கப் போகும் எலியை நினைத்துக் குதூகலித்தல்)

- எலிகளைக் கொல்லும் பொறிபற்றிய விபரிப்பு

  (கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்திரமாக எண்ணி மகிழ்தல்)

- எலிகளை அழிக்கப் பல்வேறு வழிகளைக் கையாண்டமை தொடர்பான விபரிப்பு

  - பொறிகளைப் பயன்படுத்தியமை
  - எலிப்பாஷாணத்தைப் பயன்படுத்தியமை
  - பாழ்வளவைத் துப்பரவு செய்தமை
  - பூனை வளர்த்தமை

  இவை பற்றிய விபரிப்பில் வெளிப்படும் நகைச்சுவை உணர்வு

- அலுவலகத்தில் எலி அழிப்பை பெரிய விடயமாக எடுத்துரைத்தல்
- எலிகளைக் காப்பாற்ற நினைப்பவர்களது நடத்தை பற்றிய ஊகத்தின் விபரிப்பு
- எலிகளைப் பொறிவைத்துப் பிடிப்பதைப் பெரும் யுத்தமாக எண்ணுதல்

  (அகழி நிறைந்த முதலைகளும்...)

- சட்டையைச் சேதப்படுத்தியமை பற்றிய விபரிப்பு

  (அவுஸ்திரேலியாக் கண்டத்தை ஞபகப்படுத்துவதாகக் கூறுதல்)

- அச்சட்டையை அணிய முடியாமை பற்றிய விபரிப்பு
- உலகத்திலுள்ள கெட்ட வார்த்தைகள் எல்லாம் சொல்லி எலிகளைத் திட்டியமை

  இவை போன்றன

(08 புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)